# பதவிப் போட்டியில் இறங்காத எங்களைக் கண்டு பயப்படுவானேன்?

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை, 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (15—2—50) வெளியூர் (16—2—50) [ இதழ் 169

## குடித்தனம் வெவ்வேறாயினும் கொள்கை ஒன்றே!

## பகைமை உணர்ச்சியின்றி பணியாற்றுவோம்

### மதுரையில் பொதுச்செயலாளர் சொற்பொழிவு

"தேர்தலில் கலந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமோ; அல்லது மந்திரி சபையைக் கைப்பற்றி இந்த மாகாண ஆட்சியைத் தாங்களே நடத்தவேண்டுமென்ற கருத்தோ கொண்டவர்களல்ல நாங்கள். எனவே, இன்று நடைபெறும் எங்களது அறிவுப் பிரசாரத்தைக் கண்டு தேசியத் தோழர்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை"

"புதிதாகக்குடித்தனம் செய்யப்போகும் பிள்ளை ஒருவன் தனது தகப்பனாரின் வீட்டிலுள்ள படம் மற்றும் சில சாமான்களை எடுத்துச் செல்வதுபோன்று, இன்று திராவிட கழகத்திலிருந்து, புதுமனைப் புகும் தி. மு. கழகத்தினர் தமது பழைய கட்சியிலிருந்து சில கருத்துக்களையும் எடுத்துக்கொண்டு வெளியேறியுள்ளனர். புகுந்த மனை புதிதாக இருக்கலாமேயன்றி, அதில உள்ள சரக்குகள் அத்தனையும் பழைய சரக்குகளே. கடையில் மாட்டப் பெற்றுள்ள போர்டு புதிதாக இருக்கலாமேயன்றி, அதிலுள்ள ஆட்கள் புதியவர்களல்ல. எனவேதான் திராவிடர் கழகத்துக்கும் தி.மு.கழகத்துக்குமவேற்றுமையோ பகைமை உணர்ச்சியோ இருப்பதற்கில்லை."

என்று, சென்ற 12-ந் தேதி மாலை, மதுரை நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானத்தில் நடைபெற்ற என்றுமே கண்டிராத அளவுக்கு மக்கள் அடங்கிய மாபெரும் பொதுக் கூட்டத்தில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ., அறிவித்தார்.

கூட்டத்திற்கு நகர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம். அய்யாச்சாமி தலைமை வகித்தார். அண்ணாதுரையின் பேச்சைக்கேட்பதற்குக்குடி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை, காரைக்குடி, அருப்புக் கோட்டை, சோளவந்தான் மற்றும் பல ஊர்களிலிருந்து ஏராளமான இயக்கத் தோழர்களும், பொது மக்களும் வந்து கூடிவிட்டனர்.

கூட்டம் சரியாக 7 மணிக்கு ஆரம்பமாகியது. கூட்டம் ஆரம்பமாவதற்கு ஒரு மணி நேரத்திற்கெல்லாம், கூட்டம் நடைபெறும் இடமான மைதானம் நிறைந்து மக்கள் சாலைகளிலும், வீட்டு மாடிகள், சுவர்கள், மரங்களில், எலக்ட்ரிக் கம்பங்கள் ஆகியவற்றில் ஏறிக்கொண்டு, அண்ணா வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

கூட்டத்தைச் சமாளிப்பதற்காக ஏராளமான போலீஸ் அதிகாரிகள் மிகவும் திறமையாக சேவை செய்தார்கள்.

#### மேடை அலங்காரம்

கூட்டத்தில் கூடியுள்ள மக்கள் தோழர் அண்ணாத்துரையை நன்கு கண்டுகளிக்கும்படியான அளவில், சுமார் 6 அடி உயரமுள்ள மேடை அலங்காரம் செய்து, மேடையை எலக்ட்ரிக் விளக்குகளால் நன்கு அலங்காரம் செய்திருந்தனர்.

மேடைக்குப்பின்புறம் இயக்கப் பிரமுகர்களான தோழர்கள் நீதிமாணிக்கம், எம். எஸ். சிவசுவாமி, எம். எஸ். இராமசாமி, இராம. சுப்பையா, கருத்தப் பாண்டியன், அ. பொன்னம்பலம், மற்றும் பலர் அமர்ந்திருந்தனர்.

கூட்ட ஆரம்பத்தில் பல இயக்கத் தோழர்கள் திராவிட நாட்டுப் பண் பாடினர். கூட்டத்துவக்கத்தில் தோழர் எஸ். முத்து யாவரையும் அமைதியாக இருக்குமாறு வேண்டி சிறிது நேரம் பேசினார்.

இந்நிலையில் தோழர் அண்ணாத்துரை மேடைமீது வந்தமர்ந்தார். உடனே மக்கள் காட்டிய உற்சாகமும், கைத்தட்டலும் வானைப் பிளந்தது.

#### வரவேற்பு

தி. மு. கழகம் மேற்கு வட்டக்கிளை, தாலமுத்து நடராசன் நினைவுப் படிப்பகம், இராவிட மறுமலர்ச்சி மன்றம், மத்திய வட்டார தி. மு. கழகம், ஒத்தக்கடை, தாமரைப்பட்டி, திருமோகூர், ஆழ்வார்புரம் ஆகிய மற்றும பல பகுதிகளிலுள்ள கிளைக் கழகங்களால் அண்ணாதுரைக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. மற்றும் ஏராளமான மலர் மாலைகள் தோழர் அண்ணாத்துரைக்கும், தோழர் என். வி. நடராசனுக்கும் அணிவித்தனர். 101 காலணாக்கள் கொண்ட பணமுடிப்பு ஒன்று தரப்பட்டது.

#### தோழர் என். வி. நடராசன்

பிறகு தோழர் என். வி நடராசன் புதிய அரசியல் திட்டத்திலுள்ள கேட்டினை விளக்கியும், அதை மாற்றியமைக்க தி.மு. கழகத்தோழர்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்காசி நாடுகளுக்கு அமெரிக்கா உதவி

—(0)—

### சீனாவுக்கு நிதி அளிக்கத் திட்டம்

லண்டன், பிப். 14—

ஆசியாவில் நடைபெற்ற அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகள் மாநாடும், தூரக்கிழக்கு நாடுகளுடன் தலைவர் ட்ருமன் நடத்திய பேச்சுவார்த்தைகளும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு அமெரிக்கா எத்தகைய உதவி அளிப்பது என்பது பற்றி முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

கம்யூனிச மிரட்டலுக்கு ஆளாகியிருக்கும் இந்தோனேஷியா, சீனா, சயாம், பர்மா, இந்தோ-சீனா முதலிய நாடுகளுக்கு உதவியளிப்பதற்கென ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் 75,000,000 பவுன் இராணுவ உதவி நிதியிலிருந்து, பொது சீனாவுக்கு நிதி அளித்து உதவுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்நிதியைப் பயன்படுத்துவது எப்படி என்பதுபற்றி இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. ஆனால் முதலில் இந்நிதியிலிருந்து சரிபகுதியை எடுத்து, இந்நான்கு நாடுகளுக்கும் உதவி அளிக்கப்படும். 100,000,000 டாலர் ஏற்றுமதி இறக்குமதி நிதி நிலையக் கடனை இந்தோனேஷியாவுக்கு அளிக்கப்படும். கொரியாவுக்குத் தொடர்ந்து பொருளாதார உதவி அளிக்க காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. தோழர் பாவ்டோவும் விரைவில் உதவி கோருவாரெனத் தெரிகிறது.

## இலங்கையோடு இந்திய வர்த்தகம்

கொழும்பு, பிப். 14—

1949-ம் ஆண்டு இந்திய இலங்கை வர்த்தகப் புள்ளி விவரப்படி ரூ. 132,174,086 மிச்சப்படுகிறது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ரூ. 152,553 913 பெருமானம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இலங்கையிலிருந்து இந்தியாவில் ரூ. 20,379827 பெருமானம் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள், பாகிஸ்தான் முதலிய நாடுகள் இலங்கையுடன் வர்த்தகம் செய்ததில் கண்ட மிச்சத்தைவிட, இந்தியா கண்ட மிச்சம் குறிப்பிடத்தக்கதாகும். —ரூனேப்.

## இந்தி பரீட்சை கட்டாயமாம்!

### சென்னை பல்கலைக் கழகத்தில் தீர்மானம்

இந்தி ராஷ்டிர மொழியாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் சர்வகலாசாலை பரீட்சைகள் எல்லாவற்றிலும் இந்தியில் கட்டாய பரீட்சைவைக்க வேண்டுமென்ற, சென்னை பல்கலைகழகத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வெள்ளிக்கிழமையன்று நடைபெறவிருக்கும் அகடமிக் சபைக் கூட்டத்தில் இதுபற்றி விவாதிக்கப்படுமாம்.

## மாணவர் ஊர்வலத்தில் துப்பாக்கிப் பிரயோகம்!

—(0)—

### 5 மாணவிகள் உட்பட 32பேர் கைது செய்யப்பட்டனர்!

—(0)—

#### அமிர்தசரசில் அமளி

அமிர்தசரஸ், பிப். 13—

கடந்த மூன்று தினங்களாக நடைபெற்றுவரும் கம்யூனிஸ்ட் மாணவர் சம்மேளன மாநாடு இன்று 200 பேர் கொண்ட திவட்டி ஊர்வலம் ஒன்றை நடத்தியது. ஊர்வலத்தினர் கோஷங்கள் கிளப்பிய வண்ணம் ஹால் பஜாரிலுள்ள காங்கிரஸ் அலுவலகத்தைத் தாக்கினதாகவும், அவர்களோடு வந்த போலீஷ் கோஷ்டியும், போலீஸ் குண்டும், ஒரு சப் இன்ஸ்பெக்டரும் தாக்கப்பட்டனராம். பின்னர் ஊர்வலத்தோடு வந்த மாஜிஸ்திரேட், தடியடி, கண்ணீர் வாயுப் பிரயோகம் செய்யுமாறு உத்தரவிட்டார். அதை யொட்டி, ஊர்வலத்தினர் போலீஸ்மீது சுட்டனர். அத்துடன் கலைந்து ஓடியவர்களைத் துரத்தி 32 பேர்களைக் கைது செய்தனர். அவர்களில் 5 பேர் மாணவிகள்.

லண்டன், பிப். 14—

கினியா தீவில் தேயிலை உற்பத்தி அதிகரிக்கும் என்றும், ஆஸ்திரேலியாவின் தேயிலை சப்ளை முழுவதுமே கினியா செய்யும்படியிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

## லண்டனில் பாகிஸ்தான் தூதுவர்

யுனைடெட் ஸ்டேட்ஸின் பாகிஸ்தான் தூதர் இஸ்கானி வாஷிங்டன் செல்லும் வழியில் இங்குவந்து சேர்ந்தார்.

இந்தியா, பாகிஸ்தான் வர்த்தக தகராறு பற்றியோ அல்லது இரு சர்க்காரமான பேச்சுவார்த்தை பற்றியோ அவர் எதுவும் கூற மறுத்துவிட்டார். மூக்ருன் பாகிஸ்தானின் சரக்கு நிலைமை மிகவும் திருப்திகரமாகவே இருக்கிறதென்று அவர் கூறினார்.

## மார்ஷல் திட்டத்துக்குப் போட்டியாக மாஸ்கோ திட்டம்!

—(0)—

### தூரக்கிழக்கில் வர்த்தக ஆதிக்கம்பெற ரஷியா ஆவலுறுகிறதாம்!

லண்டன், பிப். 14—

ரஷியாவின் நன்மையை முன்னிட்டும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருளாதாரத்துறையில் புத்துயிர் அளிக்கவும் தூரக்கிழக்கு நாடுகளில் வர்த்தகத்தை ஆரம்பிக்க ரஷியா திட்டமிட்டிருக்கிறதாம். இத்திட்டப்படி சீனாவுக்கும், சோவியத் ஐரோப்பாவுக்கும் இடையே வர்த்தகம் நடத்தும் மத்திய நிலையமாக மாஸ்கோ திகழும் என்று சொல்லப்படுகிறது.

இத்தகைய திட்டத்தினால், மார்ஷல் திட்டத்துக்குப் போட்டியாக மாஸ்கோ திட்டம் உருவாகிவருவதாகக் கருதப்படுகிறது.

# மாலை மணி

சென்னை 15—2—50 புதன்கிழமை


## யார் காரணம் ?

சேலம் சிறையிலே நடந்த அமளி, அமைதிநாடும் அரும் பண்பு படைத்தோர் அனைவர்க்கும் துக்கத்தையும், வேதனையையும் தரும் கொடிய தொரு நிகழ்ச்சியாகும்.

சிறைச்சாலையிலே அமளி! அமைதியும், அந்தகாரமும் இயல்பாக நிலவும் சிறைச்சாலையிலே அமளி! அடங்க மறுத்த கம்யூனிஸ்டு கைதிகளுக்கும், ஆவேசங்கொண்ட அதிகாரிகளுக்குமிடையே அமளி! பலாத்காரம் இருதரப்பிலிருந்தும் வீசப்பட்டிருக்கிறது- ஒருபக்கத்திலிருந்து கற்கள், கண்ணாடித் துண்டுகள், மரச்சட்டங்கள் பறந்திருக்கின்றன; அவற்றை எதிர்த்து மற்றொரு பக்கத்திலிருந்து குண்டுகள் பாய்ந்திருக்கின்றன. சச்சரவு, சண்டையாக மாறி, சண்டை பெரும் அமளியில் கொண்டு போய்விட்டிருக்கிறது. கற்களும், சண்ட கண்ட பொருள்களும் பறக்க, துப்பாக்கிகள் வெடி முழக்கம்செய்ய, குண்டுகள் பொழிய, செங்குருதி சிந்தும் உடலுடன் 20 பேர்கள் பிணங்களாக சாய, 102 பேர்கள் பெருங்காயங்களுற அமளி முடிந்திருக்கிறது. இவற்றிற்கெல்லாம் காரணம் யார் ? தவறு செய்தவர் யார் ? எந்தப் பக்கம் குற்றமிழைத்தது? இவைகள் விசாரித்தறிய வேண்டிய செய்திகள். இருபக்கச் சார்பற்றவர்கள் அடங்கிய விசாரணைக் குழுவே உண்மை கண்டறிந்து, உண்மைக் காரணத்தை உலகுக்கு உரைக்க வேண்டும். அதுவரையில் நம்முன் காட்சியளிப்பன 20 பிணங்கள், 102 படுகாயமுற்றோர்-ஒரு பக்கம் கம்யூனிஸ்டுகள்-மற்றொரு பக்கம் அரசாங்கம் இவைகள்தாம்.

அர்த்தமற்ற முறையில்—அவசிய மற்றவகையில்—அமைதிகெடுக்கும் தன்மையில் கையாளப்படும் பலாத்கார முறைகள் எதுவும் கண்டிக்கப்பட—வெறுத்தொதுக்கப்பட வேண்டியவைகளேயாகும். அப்படிப்பட்ட அர்த்தமற்ற பலாத்கார முறைகளை கையாளுபவர்கள் யாராயிருப்பினும், அவர்கள் கம்யூனிஸ்டுகளாயினும், காங்கிரஸ்காரர்களேயாயினும, இந்து மகாசபை வெறியர்களேயாயினும்கண்டிக்கப்படவேண்டியவர்களேயாவார்கள். திராவிட இயக்கத்தினர் அர்த்தமற்ற-அவசியமற்ற பலாத்கார முறையில் நம்பிக்கையற்றவர்கள். கொள்கைப்படி, நடமுறை நடவடிக்கைப்படி. ஆகவேதான், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பலாத்கார முறைகளைக்கொண்டு காரியமாற்றமுயலும் பிற்போக்கினரைக் கடிந்துரைத்தே வருகின்றனர்.

சேலம் சிறையில் கம்யூனிஸ்டுகைதிகள் அடங்கிநடக்க மறுத்தனர், பலாத்காரத்தில் இறங்கினர் என்று அரசாங்கத்தினரின் அறிக்கை கூறுகிறது. இது உண்மையானால், கம்யூனிஸ்டுக் கைதிகளின் செய்கைகள்நாட்டிற்கோ, மக்களுக்கோ அவர்களுக்கோ இம்மி அளவு கூட நன்மை பயக்காதனவாகும். இத்தகைய செய்கைகள் மூலம் உடல்-பொருள்-உயிர் நஷ்டத்திற்கு இடமேற்படுகிறதேயல்லாமல்கடுகளவு பயன்பெற வகையில்லை. இத்தகைய செயல்களால் பொது மக்களின் அன்பையும், ஆதரவையும் இழக்கநேரிடுமேயொழிய, இத்தகைய முறை பொதுமக்களின் அன்பைத் தேடித்தராது; தந்ததில்லை. மக்களின் மனதைக் கருத்துக்களால் மாற்றி அறிவுப்புரட்சியின் மூலம் ஆக்கப்புரட்சி காண முற்படவேண்டுமேயல்லாமல், கற்களையும், அடிகடிகளையுங்கொண்டு மாற்ற இயலாது; மார்க்கமும் ஏற்படாது.

சிறைச்சாலையில் இத்தகைய வீண் பலாத்கார நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்களும், முறைகளைக் கற்றுக்கொடுத்தவர்களும் இந்த நாட்டைப் பொறுத்த வரையில், இன்று ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் ஆளவந்தார்களே யாவார்கள், அவர்கள் கற்றுக்கொடுத்த பாடத்தைத்தான் அவர்களிடத்தில் கம்யூனிஸ்டுக் காவற்கைதிகள் ஒப்பிக்கிறார்கள் தினை விதைத்தவன் தினையறுப்பான், அதுபோல, காங்கிரஸ் தோழர்கள் அன்று விதைத்தவிதைகளின் விளைவை இன்று அறுவடை செய்கிறார்கள்.

எது எப்படியாயினும், 20 பது பிணங்கள் விழுமளவுக்கு நிலைமையைக் கொண்டுவந்து சேர்த்த திறமையின்மையால் ஏற்படும் குற்றம் முழுவதும் அதிகாரிகளைத்தான் சாரும் என்று பொது மக்கள் கருதுவார்களேயானால், அது தவறு என்று கூறுவதற்கில்லை. அதிகாரிகள் முன்னெச்சரிக்கையாக இருந்து, முறைப்படி கடைப்பிடிக்க வேண்டிய தடுப்பு முறைகளைக் கையாண்டிருந்தால் 20 பிணங்கள் சாயவும், 102 பேர்கள் படுகாயமுறவும் ஆன கொடுமை நிகழ்ச்சி ஏற்பட்டிராது. சேலம் சிறைச்சாலையில், துப்பாக்கிப் பிரயோகம் எடுத்தவுடனே செய்ய முற்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறதேயல்லாமல், வேறுமுறைகளை முயற்சித்து, அவைகளால் முடியாமற்போனதால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. அந்த அளவுக்கு நிலைமை மோசமாக்கப்படுவானேன் ? சிறைகள் தோறும் காவற்கைதிகள் நாளுக்குநாள் பலாத்கார நடவடிக்கைகளில் இறங்கி வருகிறார்கள் என்பது நன்கு தெரிந்திருந்தும், வேலூர் கடலூர் போன்ற சிறைகளில் நடந்த நிகழ்ச்சிகள் முன் எடுத்துக்காட்டுகளாக விளங்கியிருந்தும், சேலம் சிறையில் முன்னெச்சரிக்கை கொள்ளாமலிருந்ததற்கு என்ன காரணம்? சிறையதிகாரிகள் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுத்திருந்தால், இப்படிப்பட்ட படுகொலைகள் ஏற்பட்டிருக்காதே! சேலம் கொடுமைக் காட்சி நிகழ்ந்ததற்குக் காரணம் கம்யூனிஸ்டுகளின் அதிதீவிர பலாத்காரமா ? அல்லது அதிகாரிகளின் ஆவேச-ஆணவ அடக்குமுறைகளா ? அல்லது ஆட்சியாளரின் திறமையின்மையா ? அல்லது எல்லாமும் சேர்ந்ததா ? என்பதை விசாரணைக் கமிஷன் மூலமே நாடு கண்டறியவேண்டும்.

**யார் காரணம்?** என்பதைத் தெளிவாக அறிந்துகொண்டால்தான், இனிமேல் இத்தகைய கொடுமைக் காட்சிகள் நிகழாமல் பார்த்துக்கொள்ள ஏதுவாகும். குற்றம் இருக்கும் இடம் கண்டறியப்பட வேண்டும் எனவேதான்யார்காரணம் என்பதைக் கண்டறிவதிலே கருத்தைச்செலுத்தி அநாகரிமுறை நாட்டைவிட்டு அகலுவதற்கான வழிவகைகளைக் காண ஆளவந்தார்கள் முற்பட வேண்டும் என்று, இச்சந்தர்ப்பத்தில் வற்புறுத்திக்கூற விரும்புகிறோம்.

## அறிவுக் கதிர் !

**பழமைப் பித்தத்திலிருந்தேவகுப்பு வாதம் கிளம்பியிருக்கிறது. பழங்கால நோக்கில் விஷயங்களை அணுகுவதாலும், பழங்கால ஸ்லோகங்களைக் கோஷிப்பதாலுமே வகுப்புவாதம்தோன்றுகிறது.** — பண்டித நேரு

## கிழக்குச் சீனவில் புரட்சி ஏற்படுமென்ற அச்சம்

லண்டன், பிப். 14—

*கிழக்குச் சீனப் பிரதேசங்களில் ரஷ்ய ஆதிக்கத்தை எதிர்த்து ஓர் புரட்சி ஏற்படுமென்று ஓர் செய்தி கூறுகிறது. பக்கிங், ஷியாங்ஷியு, கியாங் ஆகிய மாகாணங்களின முக்கிய பகுதிகளைக் கைப்பற்றும்படி இரண்டாவது சீனத் தரைப்படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.*

*அந்த மாகாணங்கள் மூன்றாவது படையினரின் தளபதியான ஜெனரல் சென்யிஸ் என்பவரால் காவல் புரியப்பட்டு வருகிறது. ஜெனரல் சென்யிஸ் மாசேதுங்கின் அரசியல் ஆதரவாளராகவிருந்தபோது பீகிங்கிலுள்ள மாஸ்கோ தலைவர்களை ஆதரிப்பவர்களைக் கடுமையாக நடத்தும்படி ஆணையிடப்பட்டதாகத் தெரிகிறது.*

## ஆஸ்திரேலியாவில் ஆடுகள் எண்ணிக்கை

மெல்போர்ன், பிப். 14—

*1944 லிலும் 1947-லும் ஆடுகள் எண்ணிக்கை ஆஸ்திரேலியாவில் மிகவும் குறைந்தது. இவ்வாண்டு அது அதிகரித்துவிட்டது. நல்லொரு ஆடும் கிழங்கம்பளம் கொடுக்கின்றனவாம்.*

## அமெரிக்காவின் தென் பகுதியில் சூராவளி!

### 50 பேர் மாண்டு; 200 பேர் காயமுற்றனர்

நியூயார்க், பிப். 14—

*பெருத்த ஓசையுடனும் மழையுடனும் நேற்று அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் ஒரு சூறைக் காற்று தோன்றி, பலத்த சேதம் உண்டு பண்ணிவிட்டது: 50க்கு மேற்பட்ட மக்கள் மாண்டார்கள். 200 பேர் காயமடைந்தனர், பயிர்கள் சேதமடைந்தன, வீடுக் கூரைகள் பிய்த் தெரியப்பட்டன.*

*தென்னேசியில் உறங்கிக்கொண்டிருந்த குடும்பமொன்றில் 8 பேர் மாண்டுவிடந்தனர். அவர்களில் தகப்பனார் ஒருவரின் உடல் அரைமைலுக்கு அப்பால் கிடக்கக் கண்டனர்கள். கேற்றுதென்னேசியில் தோன்றிய இச்சூறைக்காற்று ஞாயிற்றுக்கிழமையன்று லூசியானா, டெக்சாஸ் அர்க்கசாஸ் முதலிய பகுதியிலாரம்பமாயிற்றாம்.*

*டேக்ஸாஸில்உணவுஉண்ண அமர்ந்த ஒரு குடும்பமே இச்சூராவளியால்தாக்கப்பட்டது 6 பேர் உள்ள அக்குடும்பத்தில் மூவர் மாண்டதாகவும், இருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும், ஒரு நான்கு வயது பெண் குழந்தை மட்டுமே அபாயத்துக்குள்ளாகாமல் இருப்பதாகவும்சொல்லப்படுகிறது.* —குளோப

### டிட்டோ கடன் கேட்கிறாராம் !

*யூகோஸ்லாவியாவை எதிர்நோக்கியுள்ள நெருக்கடியைச் சமாளித்துத் தான் போட்டுள்ள 5 ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தை பூரணமாக நிறைவேற்ற, மேலுநாடுகளிலிருந்து அதிகக் கடன் உதவியைப்பெற மார்ஷல் டிட்டோ முயற்சி செய்து வருகிறார் என்று தெரிகிறது.*

*இவர் உலக பாங்கியையும் அமெரிக்காவின் ஏற்றுமதி இறக்குமதி பாங்கியையும் கடன் உதவியளிக்கும்படி கோரியிருப்பதாகத் தெரிகிறது.*

*இந்த ஸ்தாபனங்களிலிருந்து இவர் ஏற்கனவே 30 000,000 டாலர் கடன் பெற்றிருக்கிறார். இதற்கு மேல் 6000 000 டாலர் கடன் உதவியை அவர் கேட்டிருப்பதாகத் தெரிகிறது*

### கடற்கரையோரங்களிலும் நிறத்திமிர்

டர்பன், பிப். 14—

*டர்பன் கடற்கரைகளிலும் இனி நிறத்துவேஷக் காட்டப்படும் என்று தெரியவருவதாக இங்குள்ள இந்திய வட்டாரங்களில் கூறப்படுகிறது.*

*வெள்ளையர்கள் காற்றுவாங்குவதற்காக தனிப் பகுதி ஒதுக்கப்படுமாம்.*

## இந்திய- இலங்கை உறவுக்கு வழிகோலுக !

### இலங்கையில் சென்னை மேயர் டாக்டர் செரியன்

கொழும்பு, பிப். 14—

நாம் ஒருவர் ஆதரவை மற்றொருவர் நம்பிக்கொண்டு வாழ வேண்டியவர்களாகவுள்ளோம். ஆகையால், நாம் நண்பர்கள் போல் வாழ வேண்டும். இந்தியா இலங்கையிடமிருந்துகற்றுக்கொள்ளவேண்டியதுஎவ்வளவோயிருக்கிறது அதைப் போலவே இலங்கையும், இந்தியாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிரம்பவுள்ளன என்று இங்கு நடைபெற்ற ரோடரி கான்பரென்ஸில் பேசுகையில் சென்னை மேயர் டாக்டர் செரியன் குறிப்பிட்டார். மேலும் அவர், இலங்கையிலுள்ள நண்பர்கள் இலங்கையிலுள்ள கஷ்டங்களையும்,முக்கியப் பிரச்சினைகளையும் அறிந்து நடந்தும்படி கேட்டுக்கொள்கிறேன். உறவு மனப்பான்மை கொண்டு, நாட்டுக்கு மிக நன்மை பயக்கக்கூடியவைகளிலும், நாட்டுமுன்னேற்றத்திற்கான வழிகளிலும் ஈடுபட்டு வாழும்படி நான் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சுய நலத்தைச் சிறிதும் விரும்பாதவர்களாக யிருக்க வேண்டுமென்றும் கூறினார்.

லண்டன், பிப். 14—

எகிப்து நேஷனல் பாங்கி யு.எஸ். தங்கம் 25,000000 பவுனுக்கும், யு. எஸ். கடன் பத்திரங்களை 22,000000 பவுனுக்கும் வாங்கியிருக்கிறது.

### வெஸ்டர்லிங் இந்தோனேஷியா வந்த விதம்

கொழும்பு, பிப். 14—

வெஸ்டர்லிங் இந்தோனேஷியாவுக்கு வரும்போது வியாபாரம் நடத்தப்போவதாகக் கூறி வந்தான் என்றும் அப்போது தெரியவில்லை என்றும் டச்சு ராணுவத் தலைமைப் பதவியிலிருந்து விலகிய வான் கூர் என்பவர் இங்கு கூறினர்.

### நாடு கடத்தபட்ட சயாம் தளபதி

#### திரும்பிவர அனுமதி கோருகிறார்

*சயாம் சர்க்காருக்கெதிராக வசதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட சயாம் உதவி சேனாதிபதி ஜெனரல் சோக்ராம் தான் திரும்பிவர அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், தன்னை விசாரணை நடத்தவேண்டும் என்றும் கோருகிறார்.*

*தன் காரியாலயத்தில் திடீர் என்று கைது செய்யப்பட்டு பிரஷ்டம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதென்றும், சர்க்காரை தான் தாக்கியது உண்மைதான் என்றும், ஆனால் பிரஷ்டம் செய்யும் தன்டனை அவ்நாட்டினருக்குத்தான் கொடுக்கப்படுவது வழக்கம் என்றும், தான் கம்யூனிஸ்டுகளைத் தீவிரமாக எதிர்ப்பவர் என்றும் கூறினார்.* (குளோப்)

# ஏஜண்டுகளுக்கு !

20-2-1950 முதல் "மாலை மணி" உலகச் செய்திகளைத் தாங்கி பெரிய அளவில் வெளிவருவதற்கான ஏற்பாடுகள் யாவும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

'மாலை மணி' ஏஜண்டுகள் தங்களுடைய பாக்கி பூராவையும் 16-2-'50குள் அனுப்பவேண்டும். அப்படி அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்குக் கட்டாயம் பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப முடியாதென்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேம்.

"மாலை மணி" பதிப்பகத்தார்.

# சென்னை மாவட்ட தி. மு. க. நிர்வாகக்கமிட்டிக் கூட்டம்

12—2—50 ஞாயிறு பகல் 3-மணிக்கு சென்னை மாவட்ட, தி. மு. கழக நிர்வாகக் கமிட்டியின், (மாவட்டக் சழக, முதல் மாநாட்டு, வரவு செலவு கணக்கு பரிசீலனை) கூட்டம், மண்ணடி மாலைமணி அலுவலகத்தில் நடைபெற்றது. மாகாணக் கழகப் பொருள் குழுச் செயலாளர் தோழர் காஞ்சி மணிமொழியார் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்

விற்பனையான டிக்கட்களையும், மிச்சமுள்ள டிக்கட்களையும் வைத்து பரிசீலனை செய்து பார்த்து, சரியாக இருப்பதாக அங்கீகரிக்கப்பட்டு செயலாளர் கே. கோவிந்தசாமி அவர்கள் கொண்டு வந்த மாநாட்டின் வரவு செலவு கணக்குகள், தனித் தனி பகுதிகளாக விவரமாகப் படிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்ட பின், தாராளமாக விவாதிக்கப்பட்டு, சரியாக இருப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

வரவு செலவு கணக்கு விவரம்:—

| | | வரவு | செலவு |
|---|---|---|---|
| டிக்கட் விற்பனை | 7275—8—0 | | |
| டிக்கட் மாற்று வகை | 110-13—6 | | |
| ஆக டிக்கட் விற்பனை மூலம் வரவு | | 7386—5—6 | |
| ஸ்டால் வாடகை | 127—8—0 | | |
| சாமான்கள் விற்பனை | 22—8—0 | | |
| ஆக இதர வரவுகள் | | 150—0—0 | |
| ஆட்கள் போக்குவரத்து, சாமான்கள் கொண்டுபோக வர, ஆகிய போக்குவரத்து செலவுகள் | | | 115-15—0 |
| தபால் செலவு | | | 9-10—3 |
| சாப்பாடு டிபன், டீ, காபி வகைகள் | | | 488-11—3 |
| பந்தல், மேடை, பானர் வகைகள் | | | 1308-14—9 |
| நாடகச் செலவுகள் | | | 622—8—0 |
| அச்சுவகைச் செலவுகள் | | | 352—8—9 |
| விளம்பர வகைச் செலவுகள் | | | 373—8—0 |
| வேலை ஆட்கள், கூலிவகை | | | 65-12—0 |
| தொண்டர், ஆம்புலன்ஸ் வகை | | | 46—6—0 |
| ஒலிபெருக்கி, மின்சார விளக்கு, காஸ்லைட்வகை | | | 425—5—9 |
| இதரச் செலவுகள் | | | 379-10—9 |
| ஆக வரவு, செலவுகள் | | 7536—5—6 | 4188—14—6 |
| மொத்த வரவு | | 7536—5—6 | |
| மொத்த செலவு | | 4188-14—6 | |
| நிகர மிச்சம் ரூ. | | 3347—7—0 | |

பிறகு கீழ்க்கண்டபடி தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேறியது:—

(1) இம் மாநாட்டில் மிச்ச மேற்பட்ட தொகை ரூ. 3347—7—0ல், ரூ. 3250—0—0 மட்டும் மாகாண திராவிட முன்னேற்றக் சழகத்திற்காக சென்னையில் கட்டடம் வாங்குவதாக இருந்தால்மட்டும் அதற்காக மாகாண கழகத்திற்குத் தருவதென்றும், கட்டிடம் வாங்குகிற வரை அந்த ரூபாய் 3250-0-0 யும் மாகாணக் சழகப் பொதுச்செயலாளர் சி. என். அண்ணாத்துரை, சென்னை மாவட்டக் கழகச் செயலாளர், கே. கோவிந்தசாமி ஆகிய இருவரும் பேரிலும் பாங்கியில் கட்டி வைப்பதென்றும், அப்படி மாகாணக் கழகத்திற்காக, சென்னையில் வாங்கும், கட்டடத்தில், மாவட்டக் கழக அலுவலகமும் வைத்துக்கொள்ள மாவட்டக் கழகத்திற்கு மாகாணக் சழகம் அனுமதி அளிக்க வேண்டுமென றும் கேட்டுத் தீர்மானம் நிறைவேறியது.

(2) இந்த ரூபாய் 3250—0—0 போக மிச்சமுள்ள தொகை ரூபாய் 97—7—0-ம், செ. மா. தி. மு. கழகத்தின்பேரில், பாங்கியில் சேவிங்ஸ் கணக்கு ஆரம்பித்து அதில் சேமித்து வைப்பதென்றும், பின்னல் மாவட்டக் கழகத்துக்காக வசூலாகும் எல்லாப் பணத்தையும் அந்தக் கணக்கிலேயே கட்டுவதென்றும், செயலாளர் கே. கோவிந்தசாமி, பொருளாளர் மு. இளையபெருமாள் ஆகிய இருவரும் சேர்ந்து, பணம் தேவையானல் திரும்பி வாங்குவதென றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த தோழர் காஞ்சி மணிமொழியார் முடிவுரை கூறியபின், செயலாளர் தோழர் கே. கோவிந்தசாமி எல்லோருக்கும் நன்றியுரை கூற, கூட்டம் இரவு 9 30 மணிக்கு இனிது முடிவுற்றது.

(வி.உ.)

# ரூர் பிரதேசத்தில் ஒரு ஹிட்லர் !

## மீசையையும் தலைமயிர் அமைப்பையும் எடுக்க மறுப்பு

பான், பிப். 13—

ரூர் பிரதேசத்தில் ஒரு சுரங்கத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி அசல் ஹிட்லர் மாதிரியே இருப்பதால், அவரைவைத்து ஹிட்லர் வாழ்க்கையைப் படம் பிடிக்க பல பிலிம் முதலாளிகள் அவரை வட்டமிட்டு வருகின்றனர்.

இவர் தோற்றம், மீசை, தலைமயிர், அமைப்பு, வயது எல்லாவற்றிலும் ஹிட்லரைப்போலவே இருக்கிறர். உயரம்தான் அசல் ஹிட்லரைவிட இரண்டு அங்குலம் குறைவாம்.

இவர் தோற்றத்தின் விளைவாபோர் முடிந்தபின்பு வாரம் ஒரு முறை போலீஸ் ஸ்டேஷனில் ஆஜராகவேண்டும் என்று உத்திரவிடப்பட்டதாகவும், இவருடைய பெயர் ஹெல் ஆல்பர்ட் வெக்கலர் என்பதாம்.

ஹிட்லரைப்போல் தோன்றக்கூடிய மீசையையும், தலைமயிர் வாருவதையும் விட்டுவிடுவதென்ன என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, அவர் பதிலளிக்கையில் ஹிட்லர் என்ற பெயர் கேள்விப்படுவதற்கு முன்னமேயே நான் இம்மாதிரி மீசையையும், இம்மாதிரி தலைமயிரையும் வைத்திருப்பதாகவும், எதற்காக அவைகளை மாற்றவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இவர் சினிமாவில் நடிக்க மறுத்துவிட்டார். ஜெர்மனியின் கௌரவத்தைக் கெடுக்கக்கூடிய படத்தில் நடிக்க தயாரில்லை என்று அவர் கூறிவிட்டாராம்.

## சிறிய அளவு பிலிம்களிலும் இனி டாக்கி தயாரிக்கமுடியும்

லண்டன், பிப். 13—

இப்பொழுது 35 எம். எம். பிலிம்களில்தான் டாக்கி படங்கள் தயாரிக்கப்படுகின்றன. 16 எம். எம். 8 எம். எம். சிறிய அளவு பிலிம்களிலும் 'மாக்னெடிக்ஸவுண்ட் ரிகார்டிங்' மூலம் பேசும் படங்கள் தயாரிக்கமுடியும் என்பது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே பதிவான ஒலியை அழித்துவிட்டு வேறு ஒலியைப் எடுத்து இணைக்கவும் இதில் முடியுமாம்.

ஆகவே, வீடுகள் பள்ளிக்கூடங்கள் முதலிய இடங்களில் காட்டப்படக்கூடிய படங்களையும் இனி பேசும் படமாகத் தயாரிக்க இது வசதியளிக்கிறது.

## இஸ்ரேலுக்கு விடுவிக்கப்பட்ட ஸ்டர்லிங் தொகை

லண்டன், பிப். 14—

பிரிட்டிஷ் பொருள் இலாகாவுக்கும், இஸ்ரேல் அரசாங்கத்தினருக்கும் மிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின்படி 39,000,000 ரூபாயைப் பிரிட்டன் அனுமதித்திருக்கிறது. இது யூதர்கள் கேட்ட அளவுக்கு அல்லவென்று கூறப்படுகிறது.

## சூளூர் சொற்பயிற்சிக் கழகம்

-2 50-ல் சொற்பயிற்சிக் கழகக் கட்டிடத்தில், இரவு 8 மணிக்கு தோழர் சி. வேலுச்சாமி தலைமையில் 'தொழிலாளி' என்னும் பொருள் பற்றி, பல அன்பர்கள் சொற்பெருக்கு ஆற்றிய பின், செயலாளர் நன்றி கூற, அநுகூலமாக சிறப்புடன் கூட்டம் முடிவுற்றது.


# தி. மு. கழகக் கூட்டங்கள்

16 - 2 - 50

பெரியாங்குப்பம் :— சி பி சிற்றரசு, கே. சின்னசாமி, ஏ. கிருஷ்ணன், கா. அழகரசு, ஐ. பெ. கோவிந்தன், ப. இராமலிங்கம், ஆர். சம்பங்கி

18 - 2 - 50

நேகமம் :— சி. பி. சிற்றரசு. ஜி. என். இராஜூ.


# இந்தியாவில் கரும்புப் பயிரிடல்

## 1949-50-க்கான முதல் மதிப்பீடு விவரம்

இந்தியாவில் 1949 - 50-ல் மொத்தம் 1,87,36 010 ஏகராவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருப்பதாக, மத்திய விவசாய மந்திரி சாகியாலய பொருளாதார புள்ளி விவர அதிகாரி தயாரித்துள்ள, இவ்வாண்டுக்கான முதல் மதிப்பீட்டிலிருந்து தெரியவருகிறது சென்ற ஆண்டு 1,68,96,000 ஏகராவில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இந்த ஆண்டு சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பு சென்ற ஆண்டைவிட 10.9 சதவிகிதம் அதிகமாகும்.

பஞ்சாப், பம்பாய், உத்தரப் பிரதேஷ், சௌராஷ்டிரம், ராஜஸ்தான் ஆகிய இடங்களிலேயே இந்த விஸ்தரிப்பு காணப்படுகிறது விதைப்பு காலத்தில் பருவ நிலை சாதகமாக இருந்ததும், உணவு உற்பத்திப் பெருக்க முயற்சிகளும் இதற்குக் காரணமாகுமென்று கூறப்படுகிறது. ஆனால் பீஹார், பெங்கால், ஹைதராபாத் ஆகிய இடங்களில் நில விஸ்தீரணம் குறைந்திருப்பதாகத் தெரிகிறது பீஹாரில் மதிப்பிட்டு முறையில் மாறுதல் செய்யப்பட்டதும் மற்ற இடங்களில் விதைப்பு காலத்தில் பருவநிலை சாதகமாக இல்லாமலிருந்ததும் இந்தக் குறைவுக்குக் காரணமென்று கூறப்படுகிறது.

இந்த மதிப்பீடு, 1949 செப்டம்பர் இறுதி, 1949 அக்டோபர் ஆரம்பம்வரையுள்ள காலம்பற்றியதாகும். அதுவரை பயிர்கள் மொத்தத்தில் திருப்திகரமாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

## மஞ்சூரியாவில் ரஷ்ய ஆதிக்கம்

லண்டன், பிப். 14—

மஞ்சூரியாவில் காலனித திட்டத்தை விரிவாகப் போட்டு அமுல் செய்து அந்நாட்டைச் சரண்டரஷ்யா ஆரம்பித்துவிட்டது என்று ஒரு சீன விமர்சகர் கூறுகிறர். வடகிழக்குப் பிரதேசத்தில் எல்லா ஸ்டேஷன் மாஸ்டர்களும் ரஷ்யர்களாக இருக்கின்றனர் என்றும் போலீஸ் உயர்த்த அதிகாரிகளாக ரஷ்யர்களே நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் மஞ்சூரியாவில் ஏற்படுத்தப்பட்ட இரும்பு ஆலைகளிலிருந்து இயந்திரங்களை ரஷ்யர்கள் தங்களுக்கு உரிமையாக்கிக் கொண்டனர் என்றும் அவர் கூறுகிறர்.

கைத்தொழில் பொருள்கள் எல்லாம் மஞ்சூரியாவிலிருந்து நேரே ரஷ்யாவுக்கு அனுப்பப்படுகிறதென்றும், வடகிழக்கு சீன சர்க்காருக்கு ஒரு சொற்ப தொகை மட்டுமே கொடுக்கப்படுகிறதென்றும் கூறப்படுகிறது.

## இரும்பு மனிதர் சொல்கிறர் !

இந்தியாவில் அரசியல்கைதிகளே கிடையாது.

—சர்தார் பட்டேல்

## உலக கஞ்ஜா கட்டுப்பாடு

### ஐ. நா. சபையிடம் விடப்படும்

மிகவும் ஆபத்தக்குரிய போதை வஸ்துவான கஞ்ஜாவின் விநியோகக் கட்டுப்பாடு அதிகாரம் ஐ. நா.-விடமே விடப்படும் என்றும், இவ்வாண்டே இதற்கான உடன்படிக்கை கையெழுத்தாகலாம் என்றும் கூறப்படுகிறது.

கஞ்ஜாவை ஏராளமாக உற்பத்தி செய்யும் நாடுகளான துருக்கி, பாரசீகம், இந்தியா, யூகோஸ்லேவியா ஆகியவை, இப்புதுத் திட்டத்திற்கு இசைந்திருக்கின்றன. இவைகளில் தருகிறான் உலக வைத்திய விஞ்ஞான தேவைகளுக்கு வேண்டிய கஞ்ஜாவில் பாதியை ஏற்றுமதி செய்கிறது.

இப்புது திட்டத்தின்படி ஐ நா. ஏற்படுத்தும் கார்ப்பரேஷன்தான் கஞ்ஜாவை இறக்குமதியிலிருந்து அனுமதி அவசிய தேவைகளுக்கேற்ப விநியோகிக்கும், மீதி நடக்கும் சரக்கள் முதலில் எச்சரிக்கப்படும். பின்னர் அந்நாட்டின் கோட்டா குறைக்கப்பட்டு முடிவில் ரத்து செய்யப்படும்.

## இனி நடப்பவை

பெரியாங்குப்பம்:— ஆம்பூர் வட்டம், பெரியாங்குப்பம் தி. மு. க. கிளையின் சார்பில் 16—2—50 வியாழன் மாலை 6மணிக்கு தோழர் கே. சின்னசாமி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும், தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஏ. கிருஷ்ணன், கா. அழகரசு, ஐ. பெ. கோவிந்தன், ப. இராமலிங்கம், ஆர். சம்பங்கி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

## மறைவு

புதுக்கோட்டை, பிப். 14—

செந்தமிழ்ப் பதிப்பகம், 'பொன்னி' உரிமையாளரும், நகர திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளருமான தோழர் அ. பெரியண்ணன் அவர்களின் தந்தையார் அருணாசலனார் அவர்கள், கடந்த ஒரு வாரகாலமாக உடல் நலமில்லாதிருந்து, 12-2-50 பகல் ஒரு மணிக்கு இறக்கை எய்தினர். அன்னருக்கு வயது 68 ஆகிறது. வெளியூரிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் ஏராளமான தோழர்கள், நண்பர்கள், உறவினர்கள் வந்திருந்து மறைந்த முதியவருக்கு மரியாதை செலுத்தினர்.

(ச. ஜி.)

# பதவிப் போட்டியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் செய்யவேண்டிய கடமையையும், குறிப்பாக தொழிலாளர்களின் இன்றைய நிலைமையை விளக்கியும், ஆட்சியாளரின் வீணான அடக்குமுறையைக் கண்டித்தும் சுமார் 30 நிமிஷம் பேசினார்.

### அண்ணாத்துரை பேச்சு

தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பையும், இப்படி லட்சக்கணக்கில் இங்கு கூடி என்னை கவுரவித்ததற்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன் என்று கூறிவிட்டு, தோழர் அண்ணாத்துரை பேசியதாவது:—

கடந்த நான்கு தினங்களாக மதுரை மாவட்டம் முழுவதிலும் நான் பேசி அலுத்துவிட்டேன். எனவே இன்று எனக்கு உடம்பிற்கு சவுகரியமில்லாதிருப்பதால் நான் அதிக நேரம் உங்களிடையே பேசமுடியாத நிலையில் இன்று இருக்கிறேன்.

இன்று நமது கழகப் பிரச்சாரம் தமிழ்நாட்டின் பல பகுதியில் எல்லாம் காலையிலும், மாலையிலும் தொடர்ந்து நடைபெறுகிறது. எனவே தான் மாற்றுக்கட்சித் தோழர்கள் நாங்கள் ஏதோ தேர்தல் பிரச்சாரம் செய்கிறோம் என்று அச்சம் கொள்கிறார்கள்.

### அச்சம் வேண்டாம்

“தேர்தலில் கலந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமோ, அல்லது மந்திரிசபையைக் கைப்பற்றி இந்த மாகாண ஆட்சியை நாங்களே நடத்த வேண்டுமென்ற கருத்தோ கொண்டவர்கள் அல்ல நாங்கள். எனவே, இன்று நடைபெறும் எங்கள் அறிவுப் பிரச்சாரத்தைக் கண்டு தேசியத் தோழர்கள் அச்சம் கொள்ளத் தேவை இல்லை. உண்மையிலேயே இந்த நாட்டில் உள்ள எதிர்க்கட்சிக்காரர்களைத் தேர்தலில் கலந்து கொள்ளச் சொல்லி, அவர்களுக்கும் வசதி செய்து தந்திருக்க வேண்டும் தேசியத் தோழர்கள். அதற்குப் பதிலாக, எங்கே நாங்கள் தேர்தலில் கலந்து கொள்ளப்போகிறோமோ என்று பீதியடைந்துள்ளனர்.

நான் சொல்கிறேன் நிச்சயமாக தி. மு. கழகமும், திராவிட கழகமும் தேர்தலில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று. இதை தி மு கழகத்தின் சார்பாக அன்றி, திராவிட கழகத்தின் சார்பாகவும் உறுதி தருகிறேன்.

### பகைமை இல்லை

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னால் தலைவருக்கும் எங்களுக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தால், நாங்கள் திராவிட கழகத்தை விட்டு வெளியேறினோம். இதன் பலனால் ஏற்பட்ட புதிய அமைப்புதான் திராவிட முன்னேற்றக் கழகம். புதிதாக குடித்தனம் செய்யப் போகும் பிள்ளை ஒருவன், தனது தகப்பனாரின் வீட்டில் உள்ள படம், மற்றும் சில சாமான்களை எடுத்துச் செல்வது போன்று, இன்று திராவிட கழகத்திலிருந்து புதுமனை புகும் தி. மு. க. கழகத்தினர் தமது பழைய கட்சியிலிருந்து சில கருத்துக்களையும் எடுத்துக்கொண்டு வெளியேறியுள்ளோம். புகுந்த மனை புதிதாக இருக்கலாமே அன்றி, அதில் உள்ள சரக்குகள் அத்தனையும் பழைய சரக்குகளே! கடையில் மாட்டப் பெற்றுள்ள போர்டு புதிதாக இருக்கலாமே அன்றி, அதிலுள்ள ஆட்கள் புதியவர்கள் அல்ல எனவேதான் திராவிடர் கழகத்திற்கும், தி. மு. கழகத்திற்கும் வேற்றுமையோ, பகைமை உணர்ச்சியோ இருப்பதற்கில்லை.

இந்த சந்தர்ப்பத்தைக்கண்டு, பெரியாருக்கும், அண்ணாத்துரைக்குமிடையே பூசல் ஏற்பட்டுவிட்டது, இன்று அண்ணாவின் பேச்சில் பெரியாரைத்தாக்கி பலபேச்சுக்கள் இருக்கும் என்றும் உங்களில் யாராவது நினைத்தால், அது தவறு என்று சொல்வதோடு, நிச்சயம் ஏமாற்ற மடைவீர்கள். (கரகோஷம்)

### தூத்துக்குடி ஒரு பாடம்

பல மாதங்களுக்கு முன்னால் நமது மாகாண மாநாடு தூத்துக்குடியில் நடைபெற்றது அந்த மாநாட்டிற்கு நான் போகவில்லை. இதைசாக்காகக் கொண்டு, இனி அண்ணாதுரை ஒழிந்தான் என்று, அவனுக்கு இனி பொது வாழ்விலே மதிப்பு இருக்க முடியாது என்றும் அரசியல் வேஷக்காரர்கள் ஆருடம் கணித்தனர். இது மட்டுமல்ல! இன்னும் சில நண்பர்கள், அண்ணாத்துரை சினிமாத்துறைக்குச் சென்றுவிட்டான் என்றும் கேலி பேசினார்கள். ஆனால் நடந்தது என்ன? ஈரோடு மாநாட்டிலே என்னைத் தலைமை தாங்க வைத்தார் பெரியார். நான் சினிமாத்துறைக்குச் சென்றதால் அங்குள்ள நண்பர்கள் பலர். நமது இயக்கத்திற்கு வந்தார்களே தவிர, நான் கொள்கையிலிருந்து தவறவில்லை (பலத்த கரகோஷம்)

### குரு துரோகியா?

கடந்த பல ஆண்டுகளிலே நான் மாணவர்களிடம் பேசிக்கொண்டுவரும்போதுதான் நம்மிடையே ஜஸ்டிஸ் கட்சி இருந்து கொண்டு இருந்தது. இவைகளை மாணவர்கள் கண்டு கேள்வி கேட்டனர். இவ்வளவு பேசும் உங்கள் கட்சியில் இன்று ஜமீன்தார்களும், மிராசுதார்களும் இருப்பது சரியா? என்று கேட்டனர்.

பின்னர்தான், சேலத்தில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாகாண மாநாட்டில் திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றவும், முதலாளித்துவத்தை வெளியேற்றவும் தீர்மானம் கொண்டுவந்தேன் இந்தத் தீர்மானத்தை நமது பெரியார் பாராட்டி விடுதலையில் இத்தீர்மானத்திற்கு “அண்ணாத்துரை தீர்மானம்” என்று பெரிய எழுத்தில் பிரசுரம் செய்தார்கள். இவ்விதம் கட்சியின் பெயரைப் புனிதமாக்கிய வாலிபர்களாகிய நாம் இன்று ஏன் அதை விட்டு வெளியேறினோம். இதில் நமக்கு திருப்தி ஏற்பட்டதா? இல்லை; வேதனை அடைந்தோம். இவைகளை அடக்கிக் கொண்டுதான் இன்னும் வேலை செய்கிறோம். இன்னும் சொல்லப்போனால், இப்பொழுது கொஞ்சம் தீவிரமாக வேலை செய்கிறோம்.

அன்று நாம் எல்லாம் மதத்திலே உள்ள குறைபாடுகளையும், அதனால் மக்கள் அடையும் கேவல நிலையையும் மக்களிடையே விளக்கிக் கொண்டுவரும் போது “மதத்துரோகிகள்” என்று தூற்றப்பட்டோம். அது போலவே, இன்று தலைவர் செய்த ஒரு தகாத காரியத்திற்காக, வெளியேறி வேலை செய்துவரும் என்னை குரு துரோகி என்கிறார்கள் ஒரு சிலர்.

நம்முடைய பிரச்சாரத்தின் வேகத்தால் நம்மை மதத்துரோகி என்று எண்ணிய மக்கள் எப்படி பின்னர் அவரவரை உணர்ந்தார்களோ, அது போலவே இன்னும் கொஞ்சம் நாட்கள் சென்றால் நான் “குரு துரோகி” அல்ல என்பதையும் மக்கள் உணரத்தான் போகிறார்கள் (கை தட்டல்) இதற்கிடையே பெரியாரை ஒரு நாள் போற்றியும் ஒரு நாள் தூற்றியும் எழுதி எங்களை இரு சொக்கட்டான்களாக ஆக்கிக் கொண்டிருப்பவர்கள் கூடிய விரைவில் ஏமாறத்தான் போகிறார்கள்.

(நாளை வரும்)

---

வைத்திய வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவுக்கு

ஈரோட்டில்

அனுதாபக் கூட்டம்

19—2—50 ஞாயிறு மாலை 5-மணிக்கு

நடைபெறும்

தோழர்கள் எஸ். கே. சென்னியப்பக்கவுண்டர் (நகரசபைத் தலைவர்), கே. என். குப்புசாமி பிள்ளை (நகரசபை உப தலைவர்), எம். சிக்கைய நாயக்கர், டாக்டர் எல். கே. முத்துசாமி எம்.பி., பி.எஸ்., கேளவலால் காளிதாஸ் சேட், எம். சி., இ. எஸ். தண்டபாணி அய்யர் பி. ஏ., பி. எல்., ஜி. அற்புதசாமிப் பிள்ளை பி.ஏ.பி.எல். செங்கோட கவுண்டர் எம். சி, கே. ஆர். ராமசாமி, சி. என். அண்ணாத்துரை மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

எஸ். ஆர். சந்தானம்,
செயலாளர் தி. மு. க.

---

## வெஸ்டர்லிங் பற்றி மாஜி மாமியார் கருத்து!

லண்டன், பிப். 14—

வெஸ்டர்லிங்கிற்கு ஒரு சமயம் மாமியாராக இருந்த திருமதி பேரிஸெடர் நிருபர்களிடம் கூறுகையில் இந்தோனேஷியாவில் அவன் சண்டையிட்டு வருவதால் என் பெண்ணை இனி தொந்தரவு செய்யமாட்டான் என்று கூறினார்.

யுத்த சமயத்தில் டச்சு கமாண்டோவாகவிருந்த வெஸ்டர்லிங், திருமதி மார்ஜோரி ஸெளடர் என்கிற மாதை மணம் செய்துகொண்டார். இரண்டு ஆண்டுகள் கழித்து அவர் விவாக ரத்து செய்து கொண்டார். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு இப்பொழுது வயது ஆறு ஆகிறது.

இந்தப்பெண்ணை தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர வெஸ்டர்லிங் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. இப்பொழுது அவருடைய மனைவி தன் பெண்களுடன் அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டாள்.

வெஸ்டர்லிங் தன் குழந்தைப் பருவத்தில் காட்டிற்குள் ஓடிப்போய் விடுவதுண்டாம் ஒரு நல்ல பாம்பை வைத்துக் கொண்டு தன் தாயாரைப் பயமுறுத்துவானும்.

## உலக மாணவர்களுக்கு உதவி நிதி

நியூயார்க், பிப். 14—

உலக மாணவர் உதவி நிதிக்கு இந்தியா, பாகிஸ்தான், பர்மா, மலேயா, ஜப்பான் முதலிய 34 தேசங்கள் சேர்த்த பணம் கொடுத்து வருகின்றன. இதன் மூலம் உலக மாணவர்கள் அவர்கள் ஜாதிமத நிற ராஜீய வித்தியாசமின்றி கல்வி கற்பதற்கான வசதிகள் அளிக்கப்படுகின்றனர்.

மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வைத்திய உதவி, மற்றும் தேவையானவைகளை அளிப்பது முதலிய சகல வசதிகளையும் இந்த ஸ்தாபனம் செய்துகொடுக்கிறது.

## ரஷ்யா ஆடம்பரக் கப்பல்களைக் கட்டுகிறது

போருக்குப்பின் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஜெர்மன் கப்பல்களைக் கொண்டு ரஷ்யா ஆடம்பரக் கப்பல்களைக் கட்டி வருகிறது என்று இங்கு கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன. —குளோப்

## நேட்டால் பள்ளிகளில் இடமில்லை

### 30,000 இந்திய சிறுவர் சிறுமியர் திண்டாட்டம்

டர்பன், பிப். 14—

ஆரம்பப்பள்ளிகளில் படித்துத் தேர்ந்த 1100 மாணவர்களில் ஒரு சிலருக்கே செகண்டரி பள்ளிகளில் சேர இடம் கிடைக்கும் என்று தெரிகிறது. நேட்டால் பூராவுமே பள்ளிகளில் இடவசதியின்றி தவிக்கும் நிலைமை இருந்துவருகிறது 30000 இந்திய சிறுவர் சிறுமியர் பள்ளியில் சேர இடமில்லாது தவிப்பதாகக் கூறப்படுகிறது.

ஏதென்ஸ், பிப். 14—

ஏதென்ஸ் நகர மத்தியில் ஒரு வெடிகுண்டு வெடித்ததின் பலனாக, ஒரு கிரேக்க ஸோல்ஜர் படுகாயமடைந்தார்.

## பெயரிடல்

வத்தலக்குண்டு தி.மு.கழக உறுப்பினர் தோழர் எஸ். பி. ஆசிர்வாதம் அவர்களின் துணைவியார் தோழியர் கனகமணி அம்மைக்கு 5-11-50-ல் பிறந்த ஆண் மகவுக்கு “ஆசிமணி” எனப் பெயரிடப்பட்டது.

* * *

சென்னை, பெரம்பூர் தோழர் எம். சின்னசாமி அவர்களின் குழந்தைக்கு அறிஞர் கா. அப்பாத்துரை அவர்களால் “வள்ளுவர் ஒளி” எனப் பெயரிடப்பட்டது

## சென்னையில் பருத்தி உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு

மத்திய விவசாய மந்திரி காரியாலய உபகாரியதரிசி ஸர்தார் தத்தார் ஸிங்கும், இந்திய மத்திய பருத்திக் கமிட்டியின் காரியதரிசி பி. காளிதாஸ், ஷஹானியும், இன்று சென்னை சர்க்கார் விவசாய மந்திரி, உணவு, விவசாய இலாகாக்களின் காரியதரிசிகள், விவசாய டைரக்டர் ஆகியோரைச் சந்தித்து சென்னையில் 1950—51-ல் பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதித்தனர்.

மேலும் அதிக நிலத்தில் பருத்தி சாகுபடி செய்வது, பாசன பருத்திப் பயிர்களுக்கு ரசாயன உரமிடுவது, அபிவிருத்தி செய்யப்பட்ட விதைகளை மேலும் அதிகமாக உபயோகிப்பது, கொள்முதல் செய்து வினியோகிப்பது. பருத்திப் பயிருடன் நிலக்கடலை, மிளகாய், ராகி ஆகியவற்றையும் சேர்த்துப் பயிரிடுவது ஆகிய விஷயங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி வைப்பதற்குத் தேவையான சிப்பந்திகளை நியமிப்பது பற்றியும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட நடவடிக்கைகளின் பலனாக அதிகப்படியாக சுமார் ஒரு லட்சம் சிப்பம் பருத்தி சென்னையில் உற்பத்தியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நியூஜிலாந்து ‘நியூஸ் பிரிண்ட்’ தயாரிக்கும்

வெலிங்டன், பிப். 13—

டாலர் கொடுத்து கனடாவிலிருந்து ‘நியூஸ் பிரிண்ட்’ வாங்குவதைத் தடுக்க நியூஜிலாந்தே ‘நியூஸ் பிரிண்டை’ தயாரிக்க முன்வரும் என்றும், இதற்கான முடிவான ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன வென்றும் கூறப்படுகிறது.

இதற்காக இரு கோடி செலவு செய்யப்பட்டு ‘நியூஸ் பிரிண்ட்’ உற்பத்திசாலை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கனடாவில் இதைத் தயாரிக்க உபயோகிக்கப்படும் ஊசி இலை மரம் போல் அதே தினுசான ஊசி இலை மரம் நியூஜிலாந்தில் விளைகிறது. (குளோப்)

## ஜார்டனுக்கு ஊர் காப்புப்படை

### அவசர நிலைமையின்போது இராணுவ சேவை

அம்மான், பிப். 13—

ஜார்டனில் ஊர்காப்புப் படை ஸ்தாபிக்கப்படும் என்கிற விசேஷ உத்தரவு வெளியிடப்பட்டிருக்கிறது.

20 வயது முதல் 40 வயதுவரையிலுள்ளவர்கள் இப்படையில் சேர்க்கப்பட்டு, ராணுவப் பயிற்சியும் அளிக்கப்படுவர். அவசரநிலைமையின் போது ஊர்காப்புப்படை ராணுவப் படையாக மாறும்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1